# ජාතික අධ්‍යාපන කොමිෂන් සභාව

වාර්ෂික වාර්තාව

2015

# தேசிய கல்வி ஆணைக்குழு

## வருடாந்த அறிக்கை

2015

# National Education Commission

## Annual Report

2015

නො. 126, නාවල පාර, නුගේගොඩ - 126 எனும், முகவரியில் அமைந்துள்ளது - No.126, Nawala Road, Nugegoda

**உள்ளடக்கம்** **இலக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 25 |
| 2. | செயற்பாட்டுப் பணிகள் | 27 |
| 3. | ஆணைக்குழுவின் உள்ளடக்கம் | 28 |
| 4. | நோக்கம் மற்றும் செயற்சாதனைச் சுட்டி | 29 |
| 5. | செயற்சாதனைச் சுருக்கம் - 2015 | 30 |
| 6. | வரவுசெலவு ஏற்பாடு மற்றும் நிதிமுன்னேற்றம் - 2015 | |
| 7. | இணைப்பு | 35 |
| | இணைப்பு I – நிலையான வருமானத்தை கையகப்படுத்திக் கொள்ளல் - 2015 | 36 |
| | இணைப்பு II – ஒதுக்கீட்டுக் கணக்கு – 2015 | 37 |
| | இணைப்பு III – ஆணைக்குழு உறுப்பினர்களது தகவல்கள் - 2015 | 38 |
| | இணைப்பு IV – கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2015 | 40 |
| | இணைப்பு V – நிறுவனக் கட்டமைப்பு | 47 |

## அறிமுகம்

1991 இலக்கம் 19 கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் தேசிய கல்வி ஆணைக்குழுவானது, கல்விக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் என்பவற்றை உடனே மீளாய்வு செய்தல் மற்றும் விரிவான தேசியக் கல்விக் கொள்கை சம்பந்தமாக சனாதிபதி அவர்கட்கு விதப்புரைகளை சமர்ப்பித்தலினையும் உள்ளடங்களாக கல்விக் கொள்கைகளை இடைவிடாது நிலைநிறுத்திச் செல்லுவதனை உறுதிப்படுத்துதல் மற்றும் சமுதாயத்தில் மாற்றமடையும் தேவைகளுக்கு கல்விமுறையானது இணக்கத் தன்மையினை காட்டும் கருத்துடன் கல்விக் கொள்கைகளின் சகல துறைகள் தொடர்பாக சனாதிபதி அவர்கட்கு விதப்புரைகளை சமர்ப்பிக்கும் அபிப்பிராயத்துடன் தாபிக்கப்பட்டது.

முதலாவது ஆணைக்குழுவானது 1991 – 1996 காலப்பகுதியின் பொருட்டு நியமிக்கப்பட்டது. இரண்டாவது ஆணைக்குழு 1996 ஒக்டோபர் 01 ஆம் திகதியிலிருந்து 2001 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை செயற்பட்டது. மூன்றாவது ஆணைக்குழு 2001 ஒக்டோபர் 01 ஆம் திகதியிலிருந்து 2004 மே 30 ஆம் திகதி வரை செயற்பட்டது. நான்காவது ஆணைக்குழு 2004 ஜூலை 01 ஆம் திகதியிலிருந்து 2006 மார்ச் வரையில் செயற்பட்டது. ஐந்தாவது ஆணைக்குழு 2006 ஏப்ரல் 10 ஆம் திகதியிலிருந்து தனது கடமைகளை ஆரம்பித்ததுடன் அதன் பதவிக்காலம் 2011 ஏப்ரல் 09 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. ஆறாவது ஆணைக்குழுவின் தனிப்பட்ட முதலாவது ஆணைக்குழுக் கூட்டம் 2012 நவம்பர் 20 ஆம் திகதி நடாத்தப்பட்டதோடு தனது உத்தியோகபூர்வ கடமைகளை தற்போது வரையில் வினைத்திறனுடன், 1991 இலக்கம் 19 கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம், ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வகிபாகம் மற்றும் கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றி வருகின்றது.

## நோக்கு

இலங்கையன் என்ற அடையாளத்தைப் பேணுதல் சகல பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்தல் சமச்சீரான ஒரு சமூகத்தை உருவாக்குதல் போன்ற நோக்கங்களுக்காக யாவருக்கும் கருத்துள்ள கல்வியை வழங்குதல்

## பணி

சமூகத்தின் மாறிவரும் தேவைகளைக் கருத்திற்கொண்ட முறையிலான கல்வி முறையை உருவாக்குவதற்கு ஏற்ற தேசிய கல்விக் கொள்கையை விருத்தி செய்து வளமான இலங்கையைப் பரிணமிக்கச் செய்தல்.

## செயற்பாட்டுப் பணிகள்

தேசிய கல்விக் கொள்கைகள் தொடர்பாக அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு விதப்புரைகளை சமர்ப்பிக்கும் நோக்கில் 1991 இலக்கம் 19 கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் வாயிலாக பிரதானமாக நிறைவேற்றப்படும் பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ). கல்விக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை உடன் மீளாய்வு செய்தல், விரிவான கல்விக் கொள்கைகள் சம்பந்தமாக சனாதிபதி அவர்களுக்கு விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதனை உள்ளடக்கியதாக கல்விக் கொள்கைகளின் தொடர்ச்சி நிலைநிறுத்திச் செல்லப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் சமுதாயத்தில் மாற்றமடையும் தேவைகளுக்கு கல்வி முறை இணக்கத்தைக் காட்டும் பொருட்டு, கல்விக் கொள்கையின் சகல துறைகள் தொடர்பாக சனாதிபதி அவர்கட்கு விதப்புரைகளைச் சமர்ப்பித்தல்.

(ஆ). நடைமுறையிலுள்ள தேசிய கல்விக் கொள்கை மற்றும் திட்டம் அல்லது திட்டங்கள் முன்னதாக மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுசெய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் என்பவற்றையும் அத்துடன் தேவையானபோது அக் கொள்கையில், திட்டத்தில் அல்லது திட்டங்களில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களை சனாதிபதி அவர்கட்கு விதந்துரைத்தல்.

(இ). ஆணைக்குழுவின் ஆலோசனைகளின் பொருட்டு சனாதிபதி அவர்களால் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படக்கூடிய, கல்விக்கு ஏற்புடைய சகல விடயங்கள் தொடர்பாகவும் சனாதிபதி அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.

## ஆணைக்குழுவின் உள்ளடக்கம்

(அ) 1978 இலக்கம் 16 கொண்ட பல்கலைக்கழக சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர்,

(ஆ) 1990 இலக்கம் 20 கொண்ட மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தவிசாளர்,

(இ) கல்வி மற்றும் உயர்கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், சனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர்,

(ஈ) நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், சனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர்,

(உ). மாகாணசபைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், சனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர்,

(ஊ). கல்வி, நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் ஆகிய துறைகளில் திறன்களை காட்டியுள்ளோர் அல்லது யாதேனும் தொழிற்றுறையில் நிபுணத்துவத்தினைப் பெற்றுள்ள நபர்களிடையே சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் வேறு பத்து உறுப்பினர்கள். 5 ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் தவிசாளர், உப தவிசாளர் (கொள்கை) மற்றும் உப தவிசாளர் (திட்டமிடல்) ஆணைக்குழுவின் முழுநேர உறுப்புரிமையைக் கொண்டிருப்பர்.

எனினும், 2004 ஆம் வருடம் தொடக்கம் ஒரு உப தவிசாளரால் மேற்கூறப்பட்ட உப தவிசாளர் பதவிகள் இரண்டும் (கொள்கை மற்றும் திட்டமிடல்) தழுவப்படலாயிற்று.

தற்போது இவ் ஆணைக்குழு, நுகேகொட, நாவல வீதி இலக்கம்: 126 கொண்ட நிலையத்தில் அமைந்துள்ளது. சனாதிபதி அவர்களால் நியமனஞ் செய்யப்படும் ஆணைக்குழுவின் செயலாளர், நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக செயற்படுவார். தற்போது ஆணைக்குழுவின் நிரந்தர பணியாளர் சபை 31 பேரினைக் கொண்டதாகும்.

## இலக்குகளும் செயற்சாதனைச் சுட்டியும்

| | செயற்பாடுகள் | நோக்கம் | செயற்சாதனைச் சுட்டி |
|---|---|---|---|
| 01 | பொதுக் கல்வி தொடர்பாக கொள்கைப் பிரேரணைகளை ஆக்குதல். (2014 இலிலிருந்து தொடர்ச்சியாக) | பொதுக் கல்வி தொடர்பாக கொள்கைப் பிரேரணைத் தொகுதியொன்றின் வழங்குகைக்குப் பங்களிப்புச் செய்தல். | பொதுக் கல்வி தொடர்பாகவான கொள்கை வெளியீட்டினை (03 மொழி ஊடகங்களிலும்) ஆக்குதல். |
| 02 | வகை 3 பாடசாலைகள் பற்றிய அளவாய்வு மற்றும் தரவுத் தளத்தினை தாபித்தல். | இலங்கையில் வகை 3 பாடசாலைகளின் பௌதீக மற்றும் மனிதவளங்கள் பற்றிய தகவல்கள், நிதிவளங்கள் பற்றிய தகவல்கள், நிதித் தகவல்கள், கற்றல் முறைகள் உள்ளடக்கப்படும் விதமாக தரவுகள் மற்றும் தகவல்கள் உள்ளடங்கிய தரவுத் தொகுதியொன்றினை நிர்மாணித்தல். | மேல்மாகாணம் இறுதி அறிக்கையினைத் தயாரித்தல். |
| 03 | சிங்கள மொழிப் பயன்பாடு மற்றும் தரப்படுத்துதல் தொடர்பான கற்கை (2014 இலிலிருந்து தொடர்ச்சியாக). | சிங்கள மொழிப் பயன்பாடு பற்றிய தரப்படுத்துதலினை மேற்கொள்ளுதல். | பரிந்துரையுடன் கூடிய அறிக்கையினைத் தயாரித்தல். |
| 04 | க.பொ.த (உ.தரம்) தொடர்பாக தொழில்நுட்பமுறைமை பாடவிதானம் அமுல்படுத்தப்படுதல் தொடர்பான கற்கை | *பாடசாலை அமைப்பில் பாடநெறியைப் படிப்பதற்கும், அதன் செயலாக்கத்தில் சிக்கல்கள் மற்றும் கட்டுப்பாடுகளை எவ்வாறு கையாள்வது என்பதும்.* | பரிந்துரையுடன் கூடிய அறிக்கையினைத் தயாரித்தல். |
| 05 | தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் கொள்கைகள் மற்றும் அதன்போது கவனத்திற் கொள்ளப்படும் நியதிகள் தொடர்பான கற்கை. | முறைமையினுள் பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்ளுதலின் பொருட்டு ஆசிரியர்களை ஆட்சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் ஈடுபடுத்துதல் மீது தாக்கஞ் செலுத்தும் காரணிகளை இனங்காணல். | பரிந்துரையுடன் கூடிய அறிக்கையினைத் தயாரித்தல். |

## செயற்சாதனை சுருக்கம் – 2015

### அறிமுகம்

தேசிய கல்வி ஆணைக்குழுவிடம் சட்டரீதியாக ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான கடமைப்பொறுப்புக்களை கீழ்வருமாறு மூன்று அடிப்படைத் துறைகளின் கீழ் வகைப்படுத்த முடியும்.

1. திட்ட மீளாய்வு மற்றும் பகுப்பாய்வின் மூலமாக தேசத்தின் கல்விக் கொள்கை விமரிசனம்.
2. காலத்திற்கு பொருந்தும் விதமாக நிலவும் கல்விக் கொள்கை பிரேரணைகளை நவீனமயப்படுத்துதல்.
3. மேற்குறிப்பிட்ட மீளாய்வு, பகுப்பாய்வு, விமரிசனம், நவீனமயப்படுத்துகை அனைத்தையும் பின்புலமாகக் கொண்டு தேசத்திற்கு உகப்பான கல்விக் கொள்கைகளை சனாதிபதி அவர்களிடம் விதந்துரைத்தல்.

மேற்குறிப்பிட்ட பணிகளை பூரணப்படுத்துவதற்காக தேசிய கல்வி ஆணைக்குழுவினால் கீழ்வரும் பிரதான விடயத்துறைகள் மூன்றின் கீழ் நிரந்தரமான மூன்று குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

1. பொதுக் கல்வி தொடர்பான நிரந்தர குழு
2. உயர் கல்வி தொடர்பான நிரந்தர குழு
3. தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பான நிரந்தர குழு

எவ்வாறாயினும், 2015 ஆம் வருடத்தில் தேசிய கல்வி ஆணைக்குழு 2015.01.18 திகதியிடப்பட்ட அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகை ஊடாக கல்வியமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது. அதனடிப்படையில், கல்வியமைச்சின் கீழ் அரசாங்கத்தின் திணைக்களமொன்றாக தேசிய கல்வி ஆணைக்குழு செயற்படவேண்டியதாயிற்று. அப்படி இருப்பினும், தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் கல்வியமைச்சின் கீழ் செயற்படும்போது பிரச்சினைகள் தோன்றலாயிற்று. அதனால், மீண்டும் ஏற்புடைய அதிகாரமுடையோர் இது பற்றி விளக்கமளித்து கல்வியமைச்சிலிருந்து நீக்கி, 2015.03.19 திகதியிடப்பட்ட அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழு சனாதிபதி செயலகத்தின் கீழ் செயற்படும் நிறுவனமாக ஆகப்பெற்றது.

அதன் பின்னர் தேசிய கல்வி ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமித்தல் சம்பந்தமாகவும் பிரச்சினைகள் ஏற்பட்டன. ஏற்புடைய சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளவேண்டிய சட்டபூர்வ பதவிகள் தொடர்பாக நியமனஞ்செய்தல் தாமதமடைந்தது. (ஒவ்வொரு நிறுவனத்திலும் ஏற்புடைய பதவிகளுக்கு ஆட்களை நியமனஞ் செய்தல் தாமதமடைந்தமையால்) அவ்வாறே, அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமனஞ் செய்யப்பட வேண்டிய ஏனைய பதவிகள் தொடர்பாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் சேவைகளை தொடர்ச்சியாக நிலைபெறச் செய்யப்படுதல் வேண்டுமா அல்லாவிடின் புதிய நியமனங்களைகளை மேற்கொள்ளுதல் வேண்டுமா என்பது தொடர்பாக பிரச்சினைகள் தோன்றின.

இது தொடர்பாக விசாரணை செய்யும்போது தற்போதளவில் இருக்கும் உறுப்பினர்களுக்கு தொடர்ச்சியாக சேவையினை மேற்கொள்ளுதலின் பொருட்டு சனாதிபதி செயலகத்தின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. இவ் விதமாக ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமனஞ் செய்தல் தொடர்பான சிக்கல் நிலைமை 2015 ஆம் வருடம் நவம்பர் மாதம் தீர்ப்பெற்றது. இவ்வாறான பின்புலத்தின் கீழ் 2015 ஆம் வருடம் தொடர்பாக ஆணைக்குழுக் கூட்டம் ஒன்று மாத்திரம் டிசம்பர் மாதத்தில் இடம்பெறுவதற்கான இயலுமை கிடைக்கப் பெற்றது. இக் காரணிகளால் 2015 ஆம் வருடம் வழிமாறிய ஆணைக்குழுவின்

நடவடிக்கைகளை 2016 ஆம் வருடத்திலிருந்து முன்னோக்கி நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2015 வருடாந்தத் திட்டம் அங்கீகரிக்கப்படாமை மற்றும் மேற்கூறப்பட்ட நிலையான குழுக்கள் நியமிக்கப்படாதிருப்பினும் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் 2014 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு முன்னோக்கி அமுல்படுத்துவதற்கு உரியதாகவிருந்த கீழ்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் (செயற்றிட்டங்கள்) 2015 ஆம் வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

1. பொதுக் கல்விக் கொள்கைப் பிரேரணை வழங்குகை
2. வகை 3 பாடசாலைகள் பற்றிய அளவாய்வு மற்றும் தரவுத் தளத்தினை தாபித்தல்.
3. சிங்கள மொழிப் பயன்பாடு மற்றும் தரப்படுத்துதல் தொடர்பான கற்கை.
4. க.பொ.த (உ.தரம்) தொடர்பாக தொழில்நுட்பமுறைமை பாடவிதானம் அமுல்படுத்தப்படுதல் தொடர்பான கற்கை
5. தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் கொள்கைகள் மற்றும் அதன்போது கவனத்திற் கொள்ளப்படும் நியதிகள் தொடர்பான கற்கை.

1991 ஆம் வருடத்திலிருந்து நிறுவனத்தின் செலவுகள் தொடர்பாக நிதியினைப் பெற்றுக்கொடுத்தல் திறைசேரியினால் மேற்கொள்ளப்பட்டது. எனினும் 2015 ஆம் வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து தேசிய கல்வி ஆணைக்குழுவின் செலவுகள் தொடர்பாக நிதியினை வழங்குதல் கல்வியமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில், பல பிரச்சினைகள் தோற்றம்பெற்றன. அதன்போது நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகள் தொடர்பாக மாத்திரம் நிதி கிடைக்கப்பெற்றதுடன் அபவிருத்திச் செயற்றிட்டங்களின் பொருட்டு நிதி வழங்கப்படுதல் இடம்பெறவில்லை.

நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் சனாதிபதி செயலகத்தின் கீழ் செயற்படும் நிறுவனம் ஒன்றாக ஆகப் பெற்றதனால் 2015 டிசம்பர் மாதத்திலிருந்து தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு திறைசேரியினால் மீண்டும் நிதி வழங்கப்படுதல் இடம்பெற்றது.

## 1. பொதுக் கல்வி மற்றும் கொள்கைப் பிரேரணை வழங்குகை

2014 ஆம் வருடம் முடிவடையும் போது தயாரிக்கப்பட்டவாறு காணப்பட்ட பொதுக்கல்வி கொள்கைப் பிரேரணை வரைவு 2015 முதலாம் காற்பகுதியாகும் போது தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டது. அது ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டியநிலையில் காணப்பட்டது. எனினும், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நியமனஞ் செய்யப்பட்டிராமையினால் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள இயலாமற் போனது. 2015 ஆம் வருடம் டிசம்பர் மாதம் இடம்பெற்ற முதலாவது ஆணைக்குழுக் கூட்டத்தின் போது இது கலந்துரையாடலுக்குப் பாத்திரமாகவில்லை. அது அடுத்த ஆணைக்குழு கூட்டத்தின்போது நிகழ்த்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2. வகை 3 பாடசாலைகள் பற்றிய அளவாய்வு மற்றும் தரவுத் தொகுதியினை தாபித்தல்.

2014 ஆம் வருடம் முடிவடையும் போது பகுப்பாய்விற்கு உட்பட்டவாறு காணப்பட்ட மேல், வடமேல் மற்றும் சபரகமுவ மாகாணங்களிடையே மேல் மாகாணத்தின் 14 வலயங்களது அறிக்கையொன்று 2015 ஆம் வருடத்தின் முதல் 2 காற்பகுதியினுள் தயாரிக்கப்பட்டது. அவ் வலய அறிக்கையின் வாயிலாக மேல் மாகாணத்தின் வகை 3 பாடசாலைகளை எழுச்சியுறச் செய்வதற்கு அவசியமான ஆலோசனைகளைக் கொண்ட மேல் மாகாணத்தின் இறுதி அறிக்கை 2015 ஆம் வருடம் முடிவடையும் போது தயாரித்து முடிவுறுத்தப்பட்டது.

## 3. சிங்கள மொழிப்பயன்பாடு மற்றும் தரப்படுத்துகை தொடர்பான கற்கை

2014 ஆம் வருடம் முடிவடையும் போது ஆரம்ப வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருந்தது. அதனைத் தொகுக்கும் பொருட்டு புத்திஜீவிகளைக் கொண்ட குழுவொன்றுடன் ஆரம்ப கலந்துரையாடலொன்று 2015 ஆம் வருடத்தின் முதலாவது காற்பகுதியில் நிகழ்த்தப்பட்டது. அதன் பின்னர் இது தொடர்பாக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாமையினால் முன்னோக்கிய நடவடிக்கைகளை நடாத்துவதற்கு இயலாமற் போனதுடன் அதனைத் தொகுத்து முடிவுறுத்தி இறுதி அறிக்கையினை தயாரிக்க 2015 ஆம் வருடம் முடிவடையும் போதும் இயலாமற் போயிற்று.

## 4. க.பொ.த (உ.த.) தொடர்பாக தொழில்நுட்பமுறைகள் அமுல்படுத்தப்படுதல் தொடர்பான கற்கை

2014 ஆம் வருடம் முடிவடையும் போது தரவுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுதலின் பணிகளில் ஈடுபட்டிருந்த இச் செயற்றிட்டத்தின் இறுதி அறிக்கை 2015 ஆம் வருடத்தின் 2 ஆம் காற்பகுதியாகும்போது தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டது.

## 5. தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் கொள்கைகள் மற்றும் அதன்போது கவனத்திற் கொள்ளப்படும் நியதிகள் தொடர்பான கற்கை.

இச் செயற்றிட்டத்தின் வரைவு அறிக்கை 2014 ஆம் வருடம் முடிவடையும் போது, தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் இறுதி அறிக்கை 2015 ஆம் வருடம் முதலாம் காற்பகுதியில் முடிவுறுத்தப்பட்டது.

## பணியாளர் சபையின் தகவல்கள்

2015.12.31 ஆம் தினத்திற்கு தேசிய கல்வி ஆணைக்குழுவின் பணியாளர் சபை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு அமைகின்றன.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபை | தற்போதுள்ள பணியாளர் சபை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| செயலாளர் | 1 | 1 | - |
| சிரேட்ட கொள்கை உத்தியோகத்தர் | 3 | 1 | 2 |
| பிரதிச் செயலாளர் / உதவிச் செயலாளர் | 1 | 1 | - |
| கொள்கை ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 4 | 4 | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 | - |
| நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் (நிதி) | 1 | 1 | - |
| நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் (கொள்கை / திட்டங்கள்) | 4 | 2 | 2 |
| நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் (தகவல்) | 1 | - | 1 |
| முகாமைத்துவ உதவியாளர் | 10 | 9 | 1 |
| சாரதி | 6 | 6 | - |
| பாதுகாப்பு மேற்பார்வையாளர் | 2 | 2 | - |
| அலுவலக உதவியாளர் | 4 | 3 | 1 |
| **மொத்தம்** | **38** | **31** | **7** |

## மனிதவள அபிவிருத்தி

தேசிய கல்வி ஆணைக்குழுவின் பணியாளர் சபை தற்போதளவில் 31 பேரைக் கொண்டுள்ளது. கொள்கை வழங்குகை தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் அளவாய்வு கட்டாயமானதும் அத்தியாவசியமானதும் ஆகையால் அப் பணிகளின் பொருட்டு தேர்ச்சிகளைக் கொண்ட பணியாளர் சபை இருத்தல் முக்கியமானதாகும்.

**தேசிய கல்வி ஆணைக்குழுவின் பணியாளர் சபையின் கொள்ளளவு விருத்திப் பயிற்சி சம்பந்தமான தகவல்கள் (2015.12.31 ஆம் திகதிக்கு)**

| | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பங்குபற்றிய உத்தியோகத்தரின் பெயர் | பதவி | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| 1. | Master of Education at OUSL | திரு. N.P.J. ஹேவகே | கொள்கை ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 1 வருடம் (2015/1-2016/1) |
| 2. | Basic Tamil Course at Department of Official Languages | திரு. N.P.J. ஹேவகே திருமதி. W.D.A.K. தமயந்தி திருமதி. G.L. நிமேஷா | கொள்கை ஆராய்ச்சி உத்தியோகத்தர், நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் (கொள்கை/திட்டம்), முகாமைத்துவ உதவியாளர் | 06 மாதம் (2015/6-2015/12) |
| 3. | English course at British council | திரு. E.M.Y. சச்சித் திரு. எலக்ஸ் பிகராடோ திரு. D.G.I.P. செனவிரத்ன | நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் (கொள்கை/திட்டம்), முகாமைத்துவ உதவியாளர் முகாமைத்துவ உதவியாளர் | 03 மாதம் (2015/1-2015/3) |
| 4. | Postgraduate Diploma in Education at university of Colombo | திருமதி. W.D.A.K. தமயந்தி | நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் (கொள்கை/திட்டம்) | 1 வருடம் 06 மாதம் (2015.06 இலிருந்து இன்று வரை) |
| 5. | Basic Sinhala Course at Department of Official Languages | திரு. எலக்ஸ் பிகராடோ | முகாமைத்துவ உதவியாளர் | 06 மாதம் (2015/6-2015/12) |

## வரவு செலவு ஏற்பாடுகள் மற்றும் நிதி முன்னேற்றம்

| பொருள் குறியீடு | விளக்கம் | மொத்த ஒதுக்கீடு | செலவீனம் | செலவீன சதவீதம் % |
|---|---|---|---|---|
| | **மீண்டெழும் செலவீனம்** | **37,858,000** | **30,755,493** | **81** |
| | **தனிநபர் வேதனங்கள்** | **21,560,000** | **18,749,481** | **50** |
| 1001 | ஊதியம் மற்றும் கூலிகள் | 12,500,000 | 10,064,701 | 81 |
| 1002 | மேலதிக நேரம், விடுமுறை கொடுப்பனவு | 750,000 | 575,487 | 77 |
| 1003 | ஏனைய கொடுப்பனவுகள் | 8,310,000 | 8,109,291 | 98 |
| | **பயண செலவுகள்** | **325,000** | **54,600** | **17** |
| 1101 | உள்நாட்டு | 150,000 | 54,600 | 36 |
| 1102 | வெளிநாட்டு | 175,000 | | 0 |
| | **விநியோகித்தல்** | **2,675,000** | **1,588,191** | **59** |
| 1201 | எழுது பொருட்களும் அலுவலக உபகரணங்கள் | 425,000 | 146,975 | 35 |
| 1202 | எரிபொருட்கள் | 2,000,000 | 1,263,262 | 63 |
| 1203 | உணவுகளும் உடைகளும் | 150,000 | 87,959 | 59 |
| 1205 | ஏனைய | 100,000 | 89,995 | 90 |
| | **பராமரிப்பு செலவீனம்** | **2,550,000** | **1,626,096** | **64** |
| 1301 | வாகனங்கள் | 1,600,000 | 1,141,684 | 71 |
| 1302 | ஆலையும் இயந்திரங்களும் | 800,000 | 444,051 | 56 |
| 1303 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 150,000 | 40,361 | 27 |
| | **சேவைகள்** | **10,149,560** | **8,138,681** | **80** |
| 1402 | தபால் & தொடர்பாடல் | 1,350,000 | 1,077,980 | 80 |
| 1403 | மின்சாரம் & நீர் | 1,200,000 | 873,964 | 73 |
| 1404 | வாடகை & உள்நாட்டு வரிகள் | 5,600,000 | 4,675,000 | 83 |
| 1405 | ஏனைய | 1,999,560 | 1,511,737 | 76 |
| | **மாற்றல்கள்** | | | |
| | **மூலதன செலவு** | **6,200,000** | **1,628,748** | **26** |
| | **மூலதன சொத்துக்களின் புணரமைப்பும் தரமுயர்த்தலும்** | **100,000** | **0** | **0** |
| 2002 | இயந்திரங்களும், பொறித் தொகுதிகளும் | 100,000 | 0 | **0** |
| | **மூலதன சொத்துக்களை கொள்வனவு செய்தல்** | **1,100,000** | **941,527** | **86** |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 800,000 | 799,447 | **100** |
| 2103 | இயந்திரங்களும், பொறித் தொகுதிகளும் | 300,000 | 142,080 | **47** |
| | **மனித வள அபிவிருத்தி** | **1,000,000** | **488,357** | **49** |
| 2401 | பயிற்சியும் அபிவிருத்தியும் திறன் கட்டிடம் | 1,000,000 | 488,357 | **49** |
| | **பிற மூலதன செலவீனம்** | **4,000,000** | **198,864** | **5** |
| 2502 | முதலீடுகள் | 4,000,000 | 198,864 | **5** |
| | மொத்தம் | **44,058,000** | **32,384,241** | **74** |

**இணைப்பு I**

## நிலையான வருமானத்தினை கையகப்படுத்திக் கொள்ளல் - 2015

| குறியீடு | விபரம் | எண்ணிக்கை | விலை (ரூ) |
|---|---|---|---|
| SC | உருக்கு அலுமாரி | 1 | 11,000.00 |
| COM-KB | கணினி தட்டச்சுப் பலகை | 1 | 950.00 |
| DGC | டிஜிட்டல் கமரா | 1 | 61,275.00 |
| COM-LTC | லெப்டொப் கணினி இயந்திரம் | 4 | 380,000.00 |
| COM | கணினி இயந்திரம் | 2 | 196,000.00 |
| COM-HP | ஹெட் போன் | 3 | 4,500.00 |
| COM-UPS | யூ.பி.எஸ் | 1 | 4,107.00 |
| COM-PSC | ஸ்கேனர் இயந்திரம் | 1 | 8,490.00 |
| T-11 | நிறைவேற்று மேசை - இறப்பர் | 1 | 28,500.00 |
| T-20 | கணினி மேசை | 2 | 9,200.00 |
| C-15 | லிகிதர் கதிரை | 1 | 4,100 |
| FC | கடித கோவை அலுமாரி – உருக்கு | 3 | 46,500.00 |
| EB-U | மின் மணி | 1 | 2,650.00 |
| VR | ஒலிப் பதிவு செய்யும் இயந்திரம் | 2 | 15,500.00 |
| COMO | கணினி மவுஸ் | 1 | 490.00 |
| BC | பிரீப் கேஸ் | 3 | 19,785.00 |
| EC | எக்ஸ்டென்சன் கோர்ட் | 1 | 1000.00 |
| COM-SP | ஸ்பீக்கர் | 2 | 3,800.00 |
| BP | பை | 1 | 1,600.00 |
| PC | நிழற்பிரதி இயந்திரம் | 1 | 142,080.00 |
| **மொத்தம்** | | | **941,527.00** |

**இணைப்பு II**

## ஒதுக்கீட்டுக் கணக்கு - 2015

ம.ஜீ.எஸ்.ஏ.-1

### ஒதுக்கீட்டுக் கணக்கு 2015

செலவினத் தலைப்பு இல:012

அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : தேசிய கல்வி ஆணைக்குழு

| வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல. | வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1,2,3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) | பக்க இல. (தொடர்புடைய மாதிரி ம.ஜீ.எஸ்.ஏ.-2 இன் பிரகாரம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| | மீண்டுவரும் | | | | | | | |
| I | | 37,858,000 | - | 440<br>-440 | 37,858,000 | 30,755,493 | 7,102,507 | 3 |
| | உப மொத்தம் (மீண்டுவரும்) | **37,858,000** | - | - | 37,858,000 | 30,755,493 | 7,102,507 | |
| | மூலதனம் | | | | | | | |
| I | | 6,200,000 | - | - | 6,200,000 | 1,628,749 | 4,571,252 | 4 |
| | உப மொத்தம் (மூலதனம்) | **6,200,000** | - | - | 6,200,000 | 1,628,749 | 4,571,252 | |
| | முழு மொத்தம் | **44,058,000** | - | - | 44,058,000 | 32,384,242 | 11,673,758 | |

பக்க இலக்கம் 2 முதல் 15 வரை ம.ஜீ.எஸ்.ஏ 2 முதல் ம.ஜீ.எஸ்.ஏ 10 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்கள் இலக்கம் 16 முதல் 20 உள்ளடக்கிய ஏனைய விபரங்களும் இந்த ஒதுக்கீட்டுக் கணக்கிலேயே அடங்கிய பகுதியாகும். அதனால் மேலேயுள்ள கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விபரங்கள், அது தொடர்பான கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்களுக்கு இணங்கியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும், திறைசேரிக் கணக்குப் புத்தகங்களுடன் தொடர்புடைய கணக்குகள் ஒப்புநோக்கப்பட்டுள்ளது என்பதையும், அவை சரியென உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

30.03.2016

பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலர்
பெயர்:
பதவி :
திகதி :
Prof. Lakshman Jayatilleke
Chairman
National Education Commission
126, Nawala Road, Nugegoda
Sri Lanka.

கணக்குக் கொடுக்கும் அலுவலர்
பெயர்:
பதவி :
திகதி : 30/3/16
H. Nilakshi N.Gunasekera
Secretary
National Education Commission
No. 126, Nawala Road
Nugegoda.

30.03.2016

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் :
திகதி :
S. M. Ariyarathna De Alwis
Deputy Secretary
National Education Commission
126, Nawala Road, Nugegoda.

**இணைப்பு III**

## ஆணைக்குழுவின் உறுப்பினர்களது தகவல்கள்

ஆறாவது ஆணைக்குழுவின் தனிப்பட்ட முதலாவது ஆணைக்குழுக் கூட்டம் 2012 நவம்பர் 20 ஆம் திகதி நடாத்தித் தனது உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படலாயிற்று. எனினும் 2015 ஆம் வருட ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட புதிய அரசாங்கத்தின் கீழ் தேசிய கல்வி ஆணைக்குழு கல்வியமைச்சின் கீழ் 2015.01.18 ஆம் திகதியிடப்பட்ட அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகை ஊடாக கொண்டு வரப்பட்டிருந்தது. இதனடிப்படையில், கல்வியமைச்சின் கீழ் அரசாங்கத்தின் திணைக்களமொன்றாக தேசிய கல்வி ஆணைக்குழு செயற்படவேண்டியதாயிற்று. அப்படி இருப்பினும் தேசிய கல்வி ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் கல்வியமைச்சின் கீழ் செயற்படும்போது பிரச்சினைகள் தோன்றலாயிற்று. அதனால், மீண்டும் அரசாங்கம் இது பற்றி விளக்கமளித்து கல்வியமைச்சிலிருந்து நீக்கிக் கொள்ளுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதனடிப்படையில் 2015.03.19 திகதியிடப்பட்ட அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையின் அறிவித்தலின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழு சனாதிபதி செயலகத்தின் கீழ் செயற்படும் நிறுவனமாக ஆகப்பெற்றது.

அதன் பின்னர் தேசிய கல்வி ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமித்தல் தொடர்பாகவும் பிரச்சினைகள் ஏற்பட்டன. இதனடிப்படையில் சட்டத்தின் கீழ் சட்டபூர்வமான பதவிகள் தொடர்பாக நியமனஞ்செய்தல்கள் தாமதமடைந்தன. (ஏற்புடைய நிறுவனங்களது அப் பதவிகளுக்கு ஆட்களை நியமனஞ் செய்தல் தாமதமடைந்ததால்) அவ்வாறே, அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமனஞ் செய்யப்பட வேண்டிய ஏனைய பதவிகள் தொடர்பாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் சேவையைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ளுவதன் பொருட்டு சனாதிபதி செயலகத்தினால் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது. இவ் விதமாக ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமனஞ் செய்தல் தொடர்பான சிக்கல் நிலைமை 2015 ஆம் வருடம் நவம்பர் மாதம் தீரப் பெற்றது.

**அதன் உறுப்பினர்கள்:**

**தவிசாளர்** : பேராசிரியர் லக்ஸ்மன் ஜயத்திலக்க அவர்கள்
**உப தவிசாளர்** : பேராசிரியர் ஜயந்தி குணசேக்கர அவர்கள்

### உத்தியோகபூர்வ அதிகாரத்தினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள்:

| | |
|---|---|
| தவிசாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | பேராசிரியர் மொஹான் த சில்வா |
| தவிசாளர், மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு | பேராசிரியர் ரஜீவ் விஜேசிங்க |
| கல்வியமைச்சின் பிரிதிநிதி (செயலாளர்) | திரு. W.M. பந்துசேன |
| நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பிரதிநிதி (பணிப்பாளர், தேசிய பாதீட்டுத் திணைக்களம்) | திரு. R.M.S.P.S பண்டார |
| உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சின் பிரதிநிதி (செயலாளர்) | திரு. H.T. கமல் பத்மசிறி |

## நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்:

வணக்கத்துக்குரிய பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர்

திரு. M. கிங்ஸ்லி பிரணாந்து

திரு. ஆரியரத்ன ஹேவகே

திருமதி. புஸ்பா கலுபோவில

பேராசிரியர். ஜயசேன கோட்டேகொட

பேராசிரியர். எஸ் சந்திரசேகரம்

கலாநிதி ஹிரந்தி விஜேமான்ன

பேராசிரியர் தயந்த விஜேசேக்கர

### செயலாளர்

திருமதி. P.G.D. பிரதீபா சேரசிங்க அவர்கள் 2015.02.02 ஆம் திகதி வரை

திருமதி. H.N.N. குணசேக்கர அவர்கள் 2015.02.16 ஆம் திகதி வரை

**இணைப்பு IV**

## கணக்காய்வு தலைமையதிபதி அறிக்கை – 2014

**தலைப்பு 12 – தேசிய கல்வி ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 12 – தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 செப்தம்பர் 07 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

I certified Tamil translation is correct
Name : M.S.M. Mi lh
Signature : ...
Date : 2017/6/23

1

CHECKED
RE Division

## 2 கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 44.06 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 32.39 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 11.67 மில்லியன் அதாவது 26.49 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 37.86 | 30.76 | 7.10 | 18.75 |
| மூலதனம் | 6.20 | 1.63 | 4.57 | 73.71 |
| மொத்தம் | **44.06** | **32.39** | **11.67** | **26.49** |

### 2.2 முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 01201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

2

CHECKED
RE Division

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 1.67 | 0.92 | 0.90 | 1.24 | 6.00 | 2.22 |

### 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்திற்குரிய 7002/0000/00/0256/0015/000 ஆம் இலக்க கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 173,824 ஆக இருந்தது.

### 2.4 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்குரிய 6000/0000/00/0001/0100/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் மீதி ரூபா 37,500 ஆக இருந்தது.

### 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

CHECKED
RE Division
3

**3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 275,000 நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 11 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய சேமிப்புக்கள் பின்னர் தேறிய ஏற்பாட்டின் 25 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சளவினைக் கொண்டிருந்தன.

**3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.2.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை, தேசிய கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயலாற்றல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2.2 உள்ளகக் கணக்காய்வு**

ஆணைக்குழுவில உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் குறைந்தது காலாண்டிற்கு ஒன்று வீதம் 4 கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது ஒரு குழுக்கூட்டமொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

4

CHECKED
RE Division

### 3.2.4 ஆணைக்குழு கூட்டங்கள் மற்றும் நிலையான குழு

செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவின் கூட்டங்கள் மற்றும் நிலையான குழுவின் 12 கூட்டத்தொடர்கள் வீதம் 24 கூட்டத்தொடர்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவின் ஒரு கூட்டத்தொடரே நடாத்தப்பட்டிருந்தது.

### 3.2.5 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவினால் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வறிக்கை 2016 செப்தம்பர் 30 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் அவ்வறிக்கை 2016 யூன் 27 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்டிருந்தது.

### 3.4 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

5

**(அ) திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகளுக்காக ரூபா 5,000,000 மதிப்பிடப்பட்டிருந்ததுடன், அதன் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | செயற்பாடுகள் | மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடு | செலவினம் | சேமிப்பு | அடையப் பெறாத இலக்கு மற்றும் நிலைமை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | |
| (i) | பொதுவான கல்வி கொள்கைகள் முன்மொழிவினைத் தயாரித்தல் | 1,000,000 | 182,504 | 817,495 | 10 ஆராய்ச்சி அறிக்கைகளை சமர்ப்பித்தலும் பொதுவான கல்வி தொடர்பான கொள்கைகள் வெளியீட்டை மும் மொழிகளிலும் சமர்ப்பித்தலும். |
| (ii) | முன்மொழிவினைத் தயாரித்தல் | 750,000 | - | 750,000 | 08 தொழில்நுட்ப முன் மொழிவுகளை சமர்ப்பித்தலும் பல்கலைக்கழக கல்வி தொடர்பான கொள்கைகளை மும் மொழிகளிலும் சமர்ப்பித்தல் |
| (iii) | மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி கொள்கைகள் முன்மொழிவினைத் தயாரித்தல். | 750,000 | - | 750,000 | 07 ஆராய்ச்சி அறிக்கைகளை வெளியிடுதல் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி தொடர்பான கொள்கைகள் மும் மொழிகளிலும் சமர்ப்பித்தல். |
| (iv) | வகை 3 பாடசாலை தொடர்பான கணிப்பீடு மற்றும் தரவு முறைமையை | 800,000 | - | 800,000 | 09 அறிக்கைகளை சமர்ப்பித்தல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ix) | தேசிய கல்வி ஆணைக்குழு பதவியணியின் இயலளவு அபிவிருத்தி | 1,000,000 | 488,357 | 511,643 | அங்கீகரிக்கப்பட்ட புதிய பதவிகளுக்காக பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்தல், நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளை நடாத்துல் மற்றும் பதவியணியினருக்காக பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல். |
| | மொத்தம் | **5,000,000** | **670,861** | **4,329,139** | |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 04 | 03 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 16 | 12 | 04 |
| (iv) | ஆரம்ப நிலை | 12 | 11 | 01 |
| | மொத்தம் | **37** | **31** | **06** |

CHECKED
RE Division

**இணைப்பு V**

## நிறுவனக் கட்டமைப்பு

தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிறுவன கட்டமைப்பு

